

கடலூர் மாவட்டம், நெய்வேலி என்.எல்.சி இந்தியா நிறுவனத்தின், ரகசிய வாக்கெடுப்பு தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் தொ.மு.ச சங்கம் சார்பில் நடைபெற்றது. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் ,எம்.பி, தலைமை தாங்கினார். தொ.மு.ச ,என்.பாரி, வரவேற்புரை யாற்றினார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வி.கணேசன், டாக்டர் எம் .கே. விஷ்ணு பிரசாத், எம்.பி., சபா. இராஜேந்திரன், எம்.எல்.ஏ,தொழிலாளர் விடுதலை முன்னணி பொதுச்செயலாளர் காசிநாதன்,மாநில பொதுச் செயலாளர் பேரறிவாளன், ம.தி.மு.க ஆவடி இரா அந்தரி தாஸ், பேரவை தலைவர் கே.நடராஜன், டி.வி.கே. செயலாளர் டி.வி.கே.முருகன், மூவேந்தர் முன்னேற்ற கழகம், விப்ர நாராயணன், எஸ்டி நல சங்கம் கே. கனகராஜ், சிறப்புரையாற்றினர். சா .இராசா வன்னியன், ஜி தண்டபாணி, பொ.புகழேந்தி, பா. திருமாவளவன், வி. குருநாதன் வீர இராமச்சந்திரன், சிவன்தான் செட்டி, வி. ஸ்ரீதரன் என்.நன்மாற பாண்டியன் வி. பக்கிரிசாமி, ஆர்.ஜெரால்டு. எம் .கலியன், ஆர்.ஐயப்பன் உள்ளிட்ட தொ.மு.ச ஆதரவு சங்க நிர்வாகிகள், தொ.மு.சு.துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ,நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர், கழக நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சமூக வலைதள பயிற்சிக் கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ. கீதாஜீவனுடன் தி.மு.க. செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா ஆகியோர் கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைதளங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் இளைஞர் அணி மண்டலப் பொறுப்பாளர் இன்பா ஏ.என்.ரகு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதியழகன், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முறையாக அனுமதி பெற்று மக்கள் சந்திக்கக்கூடிய இடம்:

# திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு மாற்று இடத்தில் சிலை!

## சட்டப்பேரவையில் அமைச்சர்கள் கே.என்.நேரு - மு.பெ.சாமிநாதன் உறுதி!





**சென்னை, ஏப்.24-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை திறப்பு குறித்த விவாதம் வருமாறு:-**

**முனைவர் த.இனிகோ இருதயராஜ்:** திருச்சிராப்பள்ளி பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு நிறுவப்பட்ட சிலையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன்:** தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க அனுமதி கோருகிறேன்.

உறுப்பினர் டாக்டர் இனிகோ இருதயராஜ் அவர்கள், திருச்சிராப்பள்ளி பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிலை திறக்கப்படுமா என்ற வினாவினை எழுப்பியிருக்கிறார்கள்.

தற்போது மட்டுமல்ல, உறுப்பினர் அவர்கள் என்னைப் பார்க்கின்ற ஒவ்வொரு முறையும் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் கேட்பார்கள். நானும் சிலைக்கும், செய்தித் துறைக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று அவரிடத்தில் ஏற்கெனவே, பல முறை பதில் தெரிவித்திருக்கிறேன். ஒரு அமைப்பின் மூலமாக, நடிகர் சங்கத்தின் சார்பாக, ரசிகர் மன்றத்தின் சார்பாக அந்தச் சிலை வைக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. மேலும் சொல்லவேண்டுமானால், உள்ளூர் அமைச்சராக இருக்கிற நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், கே.என். நேரு அவர்கள் தான் அங்கு அந்தச் சிலையை அமைப்பதற்காக நிதியை அளித்திருப்பதாக அதிகாரிகள்மூலம் தகவல் தெரிவிக்கப்படுகிறது. எனவே, அந்தவகையில் அவ்விடத்தில் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையைத் திறக்கமுடியவில்லை. காரணம், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. நெடுஞ்சாலையில் பொதுவிடங்களில், சாலைகளில் சிலைகளை அமைப்பது, உச்ச நிதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவரும்கூட நீதிமன்றத்திற்கு சென்றபோது அந்த மனு உயர் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்படி இருக்கும் பட்சத்தில் cover செய்யப்பட்டு, கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி நிர்வாகத்துடன் கலந்துபேசி, தக்க இடத்தைத் தேர்வு செய்து, அந்தச் சிலை மாற்று இடத்தில் நிறுவப்பட்டு, சிலை திறப்பதற்கான நடவடிக்கைத் துறையின் சார்பில் எடுக்கப்படும்.

**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** நடிப்பாற்றல் திறனால், உலகெங்கும் வியாபித்திருக்கும் தமிழர்களின் மனங்களிலே வாழ்கின்ற தமிழ்நாட்டிலுள்ள ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த, சுதந்திரப் போராட்ட தியாகியின் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டினுடைய Super Star ஆக விளங்கியவர்தான் கணேசமூர்த்தி என்கிற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சரும், நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் புரட்சிகரமான வசனங்களை உயிர்பெற வைத்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். இத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரரான நடிகர் திலகம் வாழ்ந்த ஊர், எனது தொகுதியான திருச்சி சங்கிலியாண்டபுரம். அவர் நாடகக் கலையை கற்று நடிக்க ஆரம்பித்த ஊர் திருச்சி. எனவே, அவருடைய புகழைப் பரப்புகின்ற வகையிலே அவருடைய திருவுருவச் சிலையை திருச்சியில் நிறுவ வேண்டும் என்பது அவருடைய ரசிகர்களின் நீண்டகால கனவு மற்றும் ஆசையாகும். அந்த ஆசையை நிறைவேற்றுகின்ற வகையில், திருச்சி மாநகராட்சியுடன் தீர்மானத்துடன்தான் 9 அடி கொண்ட முழு உருவ திருவுருவ வெண்கலச் சிலையை சுவாமி மலை ஸ்தபதி ஸ்ரீகண்டன் அவர்களை அழைத்து, சிலை செய்ய சொல்லி, அதற்கான முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டவர் நகராட்சித் துறை அமைச்சர் நேரு அவர்கள். ஆட்சி மாற்றத்தின் காரணமான அவர்கள் வாங்கிக் கொடுத்தார் என்பதற்காகவும், பத்து ஆண்டுகளாக ஒரு மாபெரும் கலைஞனுடைய சிலையை திறக்காமல், சாக்கு பையால் மூடப்பட்டு கிடக்கிற ஒரு கொடுமையான சூழ்நிலை. சிவாஜி மன்றத்தைச் சேர்ந்த சீனிவாசன் மோகன் பாலாஜி என்பவர்

2018ல் தொடர்ந்த வழக்கில், மதுரை உயர் நீதிமன்றம் என்ன அறிவுறுத்தியிருக்கிறது என்றால், சிலையை நகரின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிறுவி, மரியாதை செலுத்த வேண்டும் என்று அறுவுறுத்தியிருக்கிறது. எனவே, இச்சிலையை இப்போதுள்ள பாலக்கரை ரவுண்டானா பகுதி கால்நடை மருத்துவமனைக்கு அருகிலோ. . .

அல்லது சத்திரம் bus stand பகுதியிலோ, காமராஜர் சிலை பின்புறமோ Sona Mina theatre அருகிலுள்ள roundtana பகுதியிலோ அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையின்படி, ஏற்கெனவே முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அன்றைக்கு நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோது, அதற்கான NOC தடையில்லா சான்றிதழில் நானும் கையெழுத்திட்டேன். கடற்கரை சாலையிலே வைக்கப்பட்டது.

காமராஜர் ஐயா பெயர் உள்ள சாலையில், DGP office அருகில் வைக்கப்பட்டது. அதன் பிறகு, உச்ச நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் அந்தச் சிலையை எடுக்க வேண்டிய சூழ்நிலையாகிவிட்டது. நீதிமன்றத்திற்கு நாம் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. எனவே, உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அந்தச் சிலையை கொண்டு சென்று மணிமண்டபத்தில் மாற்றி வைக்கப்பட்டது. அதன்பிறகு, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முதலமைச்சர் அவர்கள், ஒருமுறை அந்தச் சிலையைப் பார்த்துவிட்டு சிலை பழுதடைந்திருக்கிறது. புதிய சிலை வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். புதிய சிலை செய்து, சிறப்பாக அது மணிமண்டபத்தின் வெளியில், மக்கள் பார்வைபடக் கூடிய வகையில் வைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு, ஆண்டுதோறும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே, முத்தமிழறிஞர் ஐயா கலைஞராக இருந்தாலும்சரி, இன்றைய முதலமைச்சர் அவர்கள் அண்ணன் தளபதியாக இருந்தாலும்சரி, நம்முடைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன்மீது பற்று கொண்டவர்கள். ஒரு குடும்ப பாசத்தோடு அவர்கள் இருவரும் இருந்தவர்கள். எனவே, அந்த வகையிலே திருச்சியிலே முறையாக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, மக்கள் சந்திக்கக்கூடிய, அதிகம் பார்க்கக்கூடிய இடமாகத் தேர்வு செய்யப்பட்டு, உள்ளாட்சித் துறை, மாநகராட்சியினுடைய தீர்மானத்தைப் பெற்று, மறுதீர்மானத்தைப் பெற்று மாவட்ட நிர்வாகத்தினுடைய ஒத்துழைப்போடு உரிய இடத்தில் முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்தாலோசித்து, முறையாக சிலை நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்து நிலையத்திலிருந்து மார்க்கெட் பகுதிக்கும், அரசு ஊழியர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளான என்.ஜி.ஓ. காலனி, பெருமாள்புரம் ஆகியவற்றில் மக்கள் நெருக்கம் இருப்பதால், அந்தப் பகுதிகளுக்கு mini buses அதிகமாக தேவைப்படுகின்றன. அப்பகுதிகளுக்கு mini buses இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடங்களை மிகத் தெளிவாக எழுதிக் கொடுப்பாரேயானால், அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் ஜெயகொண்டான் கிராமத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர்நெல்லை ஜான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி மத்திய செயலாளர் விஜயராகவன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,துணை சேர்மன் ஜெயபாலன்,இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### நல்ல முறையில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்!

# மினி பேருந்துகள் 1500க்கும் மேற்பட்டவை இயக்க நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஏப். 24 -

சட்டப் பேரவையில் மினி பேருந்து இயக்குவது சம்பந்தமாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி:** முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட அற்புதமான திட்டம் இந்தச் சிற்றுந்து திட்டம். இப்போது மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தச் சிற்றுந்துத் திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறார்கள். அதை மே ஒன்றாம் தேதியன்று துவக்க இருக்கிறார்கள். ஆனால், அதை இயக்குவதற்கு தனியார்களுக்கு permitகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த wheel base உள்ள பேருந்துகள் கிடைக்க வில்லை. அந்த wheel baseஐ உயர்த்தித் தந்தால்தான் அந்த mini busகளை அவர்கள் வாங்கி இயக்க முடியும். புதிய பேருந்துகளும் இப்போது கிடைப்பதில்லை.

ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை மனதிலே கொண்டு, அந்த wheel baseகளை மாற்றித் தந்தால் பல பள்ளிக்கூட பேருந்துகளையெல்லாம் அவர்கள் வாங்கி, பழைய பேருந்துகளை,

அந்தச் சிற்றுந்திலே அவர்கள் இயக்க ஆவன செய்ய முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதில் தனி கவனம் செலுத்தி தொடர்ந்து இந்தத் திட்டதை தடுப்பதற்காக சில சூழ்நிலைகள் உருவாவது இல்லாமல் அனைத்து கிராமப்புற ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே இந்தச் சிற்றுந்துகளை ஆணைகளுக்கு அவர்கள் வண்டிகளை வாங்கி இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேருந்துகள் இயக்குவதிலே மிகுந்த அனுபவம் கொண்டவர். அவர் கூறுகின்ற ஆலோசனை முக்கியமான ஆலோசனைதான். ஆனால், wheel baseஐ அதிகரித்தால் பெரிய பேருந்துகளுக்கும் அதற்கும் பிரச்சினை வரும்.



ஏற்கெனவே, பெரிய பேருந்துகள் இயக்குகின்றவர்களுக்கு, இந்த மினி பேருந்துகள் இயக்குகின்ற வழித்தடங்கள் குறித்த பல்வேறு கருத்துகள் இருக்கின்றன.

எனவே, நிர்வாக சிக்கல் வராமல் இருப்பதற்காகத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த மினி பேருந்துத் திட்டம் நலிவடைந்திருந்ததை மீண்டும் சரிசெய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பேருந்துகள் புதிய பேருந்து நிலையங்களோ அல்லது பக்கத்தில் இருக்கிற அரசு மருத்துவமனைகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரி போன்ற இடங்கள் வரைக்கும் கூடுதலாக இயக்குவதற்கு பல்வேறு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன.

எனவே, அதன்மூலம் இந்தப் பேருந்துகள்—கிட்டத்தட்ட 1,500க்கும் மேற்பட்ட permitகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பலரும் புதிய பேருந்துகளும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக நல்ல முறையில் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.


